THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Thursday, the 6th March 1969.

The House met in the Council Chamber, *Fort St. George*, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Strike by rice mill owners

* 136 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the 48 rice mill owners in Madurai City struck work in November 1968 without taking charge of the quantity of paddy allotted to them on the plea that they are put to a loss as the Government demand from them 64.5 per cent of rice; and

(*b*) if so, the action taken thereon by the Government?

அரிசி ஆலை சொந்தக்காரர்கள் வேலை நிறுத்தம்

திரு. என் ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை நகரில் உள்ள 48 அரிசி ஆலை சொந்தக்காரர்கள் அரசு, அரிசி 64.5 சதம் கேட்பதால் நட்டம் ஏற்படுகிறது என ஒதுக்கிய நெல்லை எடுக்காமல் 1968 நவம்பரில் வேலை நிறுத்தம் செய்தனரா?

(இ) ஆமெனில், இதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாராஜன் : தலைவர் அவர்களே, மதுரை நகரத்தில் மட்டுமல்ல, ராஜ்யத்தின் பல்வேறு பகுதியிலுள்ள அரிசி ஆலைச் சொந்தக்காரர்களும் 64.5 சதம் கேட்டால் தங்களுக்கு நஷ்டம் வருகிறது என்று கூறி பல முறை வேலை நிறுத்தம் போன்றவைகளால் சர்க்காருக்கு மறுப்பு தெரிவித்திருக்கிறார்கள். அமைச்சர்ளும் மற்றவர்களும் அவர்களைக் கண்டு பேசி 1 சதம், 2 சதம் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று ஒப்பந்தம் நடந்திருக்கிறது. ஆனால் இப்போது அமைச்சர் முழுவதும் ஒன்றுமே இல்லை என்று கூறுவது வியப்பாக இருக்கிறது. அதனால் அதை நன்கு ஆராய்ந்து பதில் தருவார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் குறிப்பிட்டதெல்லாம் வேலை நிறுத்தம் செய்யவில்லை என்பதுதான். கேள்வி வேலை நிறுத்தம் நடந்ததா என்பது. கோரிக்கை வந்தது

[6th March 1969

உண்மை. 64.5 என்பதை 63.5 ஆகக் குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் அரசாங்கம் அதை 64 என்று விசேஷச் சலுகையாகக் குறைத்தது. 1—10—1968 முதல் அந்தப் பருவத்திற்கு மட்டும் அது குறைக்கப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, உற்பத்தியாகும் நெல்லில் ஒரு பகுதிக்கு ஒரு விதமாக இருக்கிறது. சில ஜில்லாக்களில் 64 சத விகிதத்துக்கு அதிகமாகக் கிடைக்கிறது. சில ஜில்லாக்களில் குறைவாகக் கிடைக்கிறது. சில பிரிவுகளில் சில சதவீதம் குறைவாகவும் சிலவற்றில் கூடுதலாகவும் இருக்கிறது. இவையெல்லாம் எப்படி நிர்ணயிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கூடுதலாகவும் குறைவாகவும் இருப்பதால்தான் சராசரி கணக்கெடுத்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

Mechanical driers

*** 137 Q.—THIRU N. R. THIAGARAJAN:** Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Mechanical Driers installed by the Food Corporation in Thanjavur district were not utilised for even a single day during the Kuruvai season; and

(*b*) if so, the reasons therefor?

நெல் உலர்த்தும் கருவிகள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டத்தில் உணவு கார்ப்பரேஷன் அமைத்த நெல் உலர்த்தும் கருவிகள் குறுவை அறுவடையில் ஒரு நாள் கூட உபயோகிக்கப்படவில்லை என்பது சரியா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) இல்லை.

(இ) சென்ற ஆண்டு குறுவை நெல் அறுவடை செய்த பொழுது, மழை இல்லை. எனவே, நெல்லில் அதிக ஈரமில்லாததால், நெல்லை உலர்த்தும் கருவிகளில் உலர்த்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆகவே 1968-ம் ஆண்டு குறுவை அறுவடையின்போது இக்கருவிகள் அதிக அளவில் உபயோகிக்கப்படவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்தக் கருவிகள் எவ்வளவு ரூபாய் மூலதனத்தில் அமைக்கப்பட்டன? ஒரு நாளைக்கு எத்தனை டன் நெல் அதில் உலர்த்தலாம்? சாதாரணமாக அப்படி உலர்த்துவதால் சர்க்காருக்கு என்ன லாபம் கிடைக்கிறது?